ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# களஞ்சியக் காப்பாளர் (ஒப்பந்த அடிப்படை)

## 1.0 பணி/ பொறுப்புக்கள்:

- பொறியியல் சார்ந்த களஞ்சியசாலைகளைப் பராமரித்தல்.
- பொருத்தமான கையிருப்பு மட்டங்களைப் பேணுவதற்கு களஞ்சியப் பொருட்களுக்கு மீளக் கொள்வனவு கட்டளையைச் சமர்ப்பித்தல்.
- களஞ்சியசாலை கோரிக்கைப் படிவங்கள் மீது களஞ்சியப் பொருட்களை வழங்குதல்.
- பொருட்கள் பெற்றுக்கொள்ளல் குறிப்புக்களை வழங்குதல்.
- வேண்டப்பட்டவாறும் வேண்டப்படும் போதும் களஞ்சிய முகாமைத்துவ முறைமையினை உரிய நேரத்தில் இற்றைப்படுத்துவதற்கு உதவுதல்.
- கையிருப்புக் கணக்கெடுப்பில் உதவுதல்.
- கிரமமான அடிப்படையில் கையிருப்பு மீதிகளை தயாரித்து, அறிக்கைகளை நிதித் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல்.

## 2.0 வேண்டப்படும் குறைந்தபட்ச தகைமைகளும் அனுபவமும்:

### 2.1 கல்வி/தொழில்சார் தகைமைகள்

க.பொ.த உயர் தரப் பரீட்சையில் ஏதேனுமொரு துறையில் பிரதான பாடங்களில் (பொது ஆங்கிலம் நீங்கலாக) குறைந்தது மூன்று (03) ‘திறமை’ சித்திகளுடன் பதிவேட்டுபொருள் முகாமைத்துவத்தில் டிப்ளோமா/சான்றிதழ் கற்கை.

### 2.2 அனுபவம்:

கீர்த்திமிக்க நிறுவனத்தில் களஞ்சியக் காப்பாளராக 05 ஆண்டுகால அனுபவத்தையும் கணினி அடிப்படையிலான களஞ்சிய முகாமைத்துவம் தொடர்பில் அறிவினையும் கொண்டிருத்தல் வேண்டும். தொடர்புடைய துறை பற்றிய தொழில்நுட்ப அறிவு மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

**கல்விசார்/ தொழில்சார் தகைமைகள் மற்றும் பணி அனுபவத்துடன் தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளை சமர்பிக்குமாறு விண்ணப்பதாரிகளுக்கு கண்டிப்பாக ஆலோசனை வழங்கப்படுகின்றது. மேலே குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத ஏதேனும் விண்ணப்பம் ஆட்சேர்ப்புச் செயன்முறையின் ஏதேனும் கட்டத்தில் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.**

## 3.0 வயது:

2024.11.27 அன்று 35 வருடங்களுக்குக் குறைவாகவிருத்தல்

## 4.0 தொழில்:

மூன்று (03) வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்கு ஒப்பந்த அடிப்படையிலானது. ஒப்பந்தம், தொடக்கத்தில் ஒரு ஆண்டுக்கு கைச்சாத்திடப்படுவதுடன் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் செயலாற்றத்தின் அடிப்படையில் மீளப்புதுப்பிப்பதற்கு கருத்திற்கொள்ளப்படும்.

## 5.0 ஊதியம் மற்றும் ஏனைய நன்மைகள்:

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றுக்கான பங்களிப்புகளுடன் 175,000.00 கொண்ட அனைத்தையுமுள்ளடக்கிய வரிவிதிக்கத்தக்க மாதாந்தக் கொடுப்பனவு.

## தெரிவுசெய்யப்படும் முறை

மேற்குறித்த பதவிகளுக்குப் பொருத்தமான அலுவலர்கள் வங்கியினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைகளின் மூலம் தெரிவுசெய்யப்படுவர். இறுதித்தெரிவு நேர்முகப் பரீட்சையில்/ நேர்முகப் பரீட்சைகளில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் திறமை ஒழுங்கில் மேற்கொள்ளப்படும்.

## விண்ணப்பங்கள்

விண்ணப்பப் படிவங்களை இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம்செய்யலாம் https://www.cbsl.gov.lk/en/careers

குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினையே பயன்படுத்துமாறு விண்ணப்பதாரிகள் கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகின்றனர் என்பதுடன் உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை வேண்டப்பட்ட அனைத்து ஆவணங்களுடனும் 2024.11.27 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் **தபால்** மூலம் மனித வளங்கள்/ பணிப்பாளருக்கு கிடைக்கும் விதத்தில் பின்வரும் முகவரிக்கு அனுப்புமாறும் வேண்டப்படுகின்றனர்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“களஞ்சியக் காப்பாளர் (ஒப்பந்த அடிப்படை) பதவிக்கான விண்ணப்பம்”** எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

முடிவுத் திகதியன்று உள்ளவாறு வேண்டப்பட்ட தகைமைகளையும் அனுபவங்களையும் கொண்டிராதவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகைமைபெறமாட்டார். தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்யாத, முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற அல்லது குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்கப்படாத எந்தவொரு விண்ணப்பமும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

நேர்முகப்பரீட்சைக்கு முன்னர் நடத்தப்படும் சான்றிதழ் உறுதிப்படுத்தலின் போது தொடர்புடைய ஆவணங்களின் மூலங்களை சமர்பிக்கத் தவறுகின்ற பரீட்சார்த்திகள் எக்காரணத்தின் கீழும் தகைமையுடைய அபேட்சகர்களாகக் கருதப்படமாட்டார்கள். எந்தவிதத்திலேனும் ஆதரவு தேடுதல் தகைமையிழக்கச் செய்யும்

நிரப்ப வேண்டிய பதவிகளின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பதற்கான, ஆட்சேர்ப்பினைப் பிற்போடுவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை இலங்கை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. விண்ணப்பங்களைத் தெரிவு அட்டவணைப்படுத்துகையில் இலங்கை மத்திய வங்கியின் தேவைப்பாடுகளுடன் பொருந்தும் விதத்தில் தொடர்புடைய அனுபவத்தை தீர்மானிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தற்றுணிபைக் கொண்டுள்ளது. தெரிவு அட்டவணைப்படுத்தப்பட்ட அபேட்சகர்கள் மாத்திரம் ஆட்சேர்ப்புச் செயன்முறையின் அடுத்த கட்டத்திற்கு தொடர்புகொள்ளப்படுவர்.

பணிப்பாளர் - மனிதவளங்கள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
தொலைபேசி: 011-2477330 தொலைநகல் : 011-2477715